விலை ரூபா: 10.00

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 மாசி 29 செவ்வாய்க்கிழமை (13.03.2007) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 84

ராம்கோ
RAMCO
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு
# மலையகத் தமிழருக்கு பிராந்திய அதிகாரம்

## வழங்க வேண்டும் என்கிறது இ.தொ.கா

(நுவரெலியா)

மலையகத் தமிழ் மக்களுக்கு உப பிராந்திய சபைகள் உட்பட ஐந்து பிராந்திய சபைகளை அமைப்பதன் மூலம் குறிப்பிட்ட அளவு அதிகாரங்களை வழங்கி நாட்டின் தேசிய பிரச்சினைக்கு தீர்வுகாணப்பட வேண்டுமென இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கேட்டுள்ளது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்குரிய யோசனையில் அக் கட்சி இதனைத் தெரிவித்துள்ளது. உப பிராந்திய சபைகள் தற்போதுள்ள மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களை உள்ளடங்கிய அலகாக இருக்க வேண்டும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(04 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான நல்லெண்ணக் குழுவினர் அரச அதிபருடன் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டு மக்களின் தற்போதைய அத்தியாவசிய சேவைகள் குறித்து சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழு நேற்று யாழ்.அரச அதிபரை ஆயர் இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

இச் சந்திப்பில் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் தலைமையக உதவி அரசாங்க அதிபர் வை.பரந்தாபன் மற்றும் சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழு சார்பாக அதன் தலைவரும் யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியருமான பொன்.பாலசுந்தரம்பிள்ளை, நல்லை ஆதீன முதல்வர் சோமாஸ்கந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ்.மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, கிளைச் செயலாளர்களாக எஸ்.பரந்தாமன் அருட்திரு. செல்வராசா மற்றும் அருட்திரு. நேசகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச் சந்திப்பில் குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கும் போக்குவரத்து, அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பு மற்றும் கட்டுப்பாடு, கல்வி, மின்சாரம், பத்திரிகைகளுக்கான மூலப் (04 ஆம் பக்கம் பார்க்க)

## உண்ணாவிரதக் கைதிகள் 7 பேர் வைத்தியசாலையில் அனுமதி

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட தமிழ்க் கைதிகளில் ஏழுபேர் நேற்று மயக்கமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வருடம் யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் கைது செய்யப்பட்ட மாணவனான சிவராஜா பகீரதனும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் நேற்று அவர் மயக்கமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. மனித உரிமை சபையின் 4-வது கூட்டம் நேற்று ஆரம்பம்

(ஜெனீவா)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான சபையின் நான்காவது கூட்டத்தொடர் நேற்று ஜெனீவாவில் ஆரம்பமாகியது. இந்தக் கூட்டத்தில் அதன் அங்கத்துவ நாடுகள் மற்றும் மனித உரிமைகள் அமைப்புகள் ஒன்று கூடி இலங்கை உட்பட பல நாடுகளில் உள்ள மனித உரிமை நிலைமைகள் தொடர்பாக ஆராயவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மாநாட்டில் கலந்து கொண்ட மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க நேற்று தனது கருத்துரையை வழங்கியதுடன் பிரதிநிதிகளைச் சந்தித்து இலங்கை அரசின் நடவடிக்கைகள் (04 ஆம் பக்கம் பார்க்க)

## மீனவர் படுகொலையை கண்டித்து சென்னையில் நேற்று ஆர்ப்பாட்டம்

(சென்னை)



தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுவதை கண்டித்து நேற்று காலை தமிழக மீன்வளத் துறை அமைச்சர் கே.பி.பி.சாமி தலைமையில் பேரணி மற்றும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

நேற்றுக் காலை 10.30 மணியளவில் சென்னை மன்றோ சிலையிலிருந்து இப் பேரணி ஆரம்பமானது. இதில் பங்கேற்றவர்கள் 'எச்சரிக்கை எச்சரிக்கை இலங்கை அரசுக்கு எச்சரிக்கை' 'இலங்கை அரசே தமிழக மீனவர்களைக் கொல்லாதே' போன்ற வாசகங்கள் அடங்கிய அட்டைகளைத் தாங்கியிருந்ததாக தெரிவிக்கப்பட்டது. (04 ஆம் பக்கம் பார்க்க)

## இல.கடற்படையை சோதனையிட இந்திய கடற்படைக்கு அதிகாரம்

### தமிழக முதல்வர் கருணாநிதி தெரிவிப்பு

(சென்னை)

பாக்கு நீரிணையில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடும் இலங்கை கடற்படையினரின் படகுகளை சோதனைக்குட்படுத்த இந்திய கடற்படையினருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக தமிழக முதல்வர் கருணாநிதி நேற்று சென்னையில் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கைகள் மூலம் தொடர்ச்சியாக இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுவதை தடுக்கமுடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளதாக பி.ரி.ஐ. செய்திச் சேவை செய்தி வெளியிட்டுள்ளது.

புதிய நடவடிக்கைகளுக்கு இலங்கை அரசாங்கமும் தனது (04 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு எம்.பிக்கள் பிரி.தூதுவருடன் பேச்சு

(கொழும்பு)

பிரித்தானிய உயர்ஸ்தானிகரை தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப் பினர்கள் நேற்று சந்தித்து உரையாடியுள்ளனர். மட்டக்களப்பில் தற்போது ஏற்பட்டுள்ள மக்கள் இடப்பெயர்வு, அவர்கள் எதிர்நோக்கும் அவலங்கள், தொடரும் எறிகணை வீச்சுக்கள் அவற்றை நிறுத்துவதற்கான அழுத்தங்களை ஏற்படுத்தல் உள்ளிட்ட முக்கிய விடயங்களை பிரித்தானிய தூதுவரின் (04 ஆம் பக்கம் பார்க்க)

## கிளைமோர் தாக்குதலில் ஊர்காவற்படைவீரர் பலி

(கொழும்பு)

கெப்பிற்றிக்கொல்லாவவில் இடம் பெற்ற கிளைமோர் தாக்குதலில் ஊர்காவற்படை வீரர் ஒருவர் பலியாகியுள்ளதாக பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

கெப்பிற்றிக்கொல்லாவ டொடுவேவ (04 ஆம் பக்கம் பார்க்க)

## சபாநாயகர் தலைமையிலான எம்.பிக்கள் குழு யப்பான் பயணம்

(கொழும்பு)

சபாநாயகர் வி.ஜே.மு.லொக்குபண்டார தலைமையிலான பாராளுமன்ற உறுப்பினர் களைக் கொண்ட குழுவொன்று உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று முன்தினமிரவு யப்பான் பயணமானது. சபாநாயகருடன் ஐக்கிய தேசியக்கட்சி யின் காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி.இரா.சம்பந்தன் (04 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.நகர மத்தியில் வைத்து வியாபாரி சுட்டுக்கொலை

யாழ்.நகர மத்தியில் வைத்து வியாபாரி ஒருவர் இனந்தெரியாதோரால் நேற்று சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

நவாலி தெற்கு மானிப்பாயைச் சேர்ந்த லோறன்ஸ் மரியசெல்வம் (வயது 38) என்ற வியாபாரியே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

இவர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாக வைத்து சுட்டுக்கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இவரது சடலம் பிரேதபரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (எ-1)

## மகிந்த-புலிகள் உடன்படிக்கை குறித்த உண்மை வெளிப்படுத்தப்பட வேண்டும்

### ஜனாதிபதியிடம் ரணில் வேண்டுகோள்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் புலிகளுக்குமிடையில் கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது செய்து கொள்ளப்பட்டதாக கூறப்படும் உடன்படிக்கை தொடர்பாக சிறிபதி சூரியாராட்சி முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்குமாறு ஜனாதிபதியிடம் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை கம்பஹாவில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியதாவது; கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது அப்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் புலிகளுக்குமிடையில் உடன்படிக்கை ஒன்று செய்துகொள்ளப்பட்டுள்ளதாக பதவி (04 ஆம் பக்கம் பார்க்க)

# உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2007

ICC Cricket World Cup

# வண்ணமயமான ஆரம்பம்



(ஜமேக்கா)

ஜமேக்காவில் உலக கிண்ண கிரிகெட் தொடரின் ஆரம்ப விழா கோலாகலமாக நடந்தது. ஒன்பதாவது உலக கிண்ண தொடர் மேற்கிந்திய தீவுகளில் இன்று நடக்கவுள்ளது. இதில் 16 அணிகள் பங்கேற்கின்றன. வரும் ஏப்ரல் 28-ம் திகதிவரை நடக்கிறது. இப் போட்டிக்கான ஆரம்ப விழா நேற்று அதிகாலை ஜமேக்காவில் உள்ள டிரிலாவ்னி அரங்கில் வண்ணமயமாக நடந்தது.



போட்டிகளை ஜாம்பவான் கேரி சோபர்ஸ் ஆரம்பித்து வைத்தார். மேற்கிந்திய சக்தி என்ற பெயரில் 3 மணி நேரம் கலை நிகழ்ச்சிகள் நடந்தன. இதில் 2 ஆயிரம் கலைஞர்கள் கலந்து கொண்டு ஆடிப்பாடி மேற்கிந்தியக் கலாசாரத்தை பிரதிபலித்தனர். வீரர்களின் அணிவகுப்பு நடந்தது. ரூப்பி,ஷாகி ,பயான்லியானஸ் ஆகியோர் இணைந்து 'அன்புக்கும் ஒற்றுமைக்கும் கிரிகெட்' என்ற தொடரின் அதிகாரப்பூர்வ பாடலைப்பாடினர். அரங்கில் 16 அணி வீரர்களும் அணி வகுத்து வந்த போது கரகோஷம் விண்ணை பிளந்தது. இலங்கை வீரர்களை அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தன தலைமை தாங்கி அழைத்து வந்தார். (ச-5)

## சைவ நெறித்தேர்வு

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினரால் கடந்த நவம்பர் மாதம் நடைபெற விருந்த பரீட்சை எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.குறிப்பிட்ட தினத்தில் யாழ்ப்பாணம், மன்னார்,வவுனியா மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் எனவும் தேர்வுச் செயலர் கலாநிதி சைவப் புலவர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார். (ச)

## இந்து ஆலய புனரமைப்புக்கு 6 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

இந்துகலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் குடாநாட்டின் வடபகுதியிலுள்ள இரு ஆலயங்கள் புனரமைப்பதற்கு ஆறு மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

மாவிட்டபுரம் கந்தசாமி ஆலயம் மற்றும் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம் ஆகிய இரு ஆலயங்களுக்கும் தலா 3 மில்லியன் ரூபா வீதம் புனரமைப்பு பணிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இவ் நிதியானது சென்ற ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலையில் தற்பொழுது வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ச-3)

## பாகிஸ்தான்-மேற்கிந்திய தீவுகள் அணிகள் முதல் லீக்கில் இன்று மோதுகின்றன

(ஜமேக்கா)

கிரிக்கெட் ரசிகர்கள் ஆர்வத்துடன் எதிர்பார்த்த உலக கிண்ண கிரிக்கெட் போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன. முதல் லீக் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணியை பாகிஸ்தான் அணி பலப்பரீட்சை மேற்கொள்கின்றன.

லீக் போட்டிகளுக்கு முன்னதாக நடந்த பயிற்சி போட்டிகளில் முன்னாள் சம்பியன் பாகிஸ்தான் சிறப்பாக செயல்பட்டுள்ளது. கனடா ,தென் ஆபிரிக்கா அணிகளை வீழ்த்தி உள்ளது. இன் [illegible] பாகிஸ்தான் முகமது யூசுப் துடுப்பாட்டில் கூட்டணி உள்ளது. முன்னணி பந்து வீரர்களான அக்தர்,ஆசிப் காயம் காரணமாக நீக்கப்பட்டுள்ளனர்.

இருப்பினும் உமர் குல் சமிரனா் ஆசியோர் சிறப்பாக பந்து வீசி வருகின்றனர். தவிர சுழல் பந்து வீச்சில் கலக்க கனேரியா, சோயப் மாலிக் ,ஹபீஸ் ,அப்ரிடி உள்ளனர்.

சொந்த மண்ணில் உலக கிண்ண சந்திக்கும் மேற்கிந்திய தீவுகள் அணி, இந்தியாவுக்கு எதிரான பயிற்சி போட்டியில் தோல்வி அடைந்தன் மூலம் மோசமான பின்னடைவை சந்தித்துள்ளது. முன்னணி வீரர்கள் துடுப்பாட்டத்தில் தவிக்கின்றனர். பந்து வீச்சும் எதிர்பார்த்த அளவிற்கு இல்லை. இருப்பினும் லாரா, ஹெய்ல் , சர்வான் , சந்தர்போல் என பலமான துடுப்பாட்ட வரிசையை கொண்ட மேற்கிந்திய அணி எந்த நேரத்திலும் எதிரணியை வீழ்த்தும் திறமை கொண்டது என்பதில் சந்தேகமில்லை.

தொடரை ஏற்று நடத்தும் நாடு என்பதால் இரண்டு முறை சாம்பியன் மேற்கிந்திய தீவுகள் சாதித்து காட்ட வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. இரு சம்பவம் வாய்ந்த அணிகள் உலக கிண்ண முதல் போட்டியில் விறுவிறுப்புடன் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## சுற்று நிருப விவகாரம் அமைச்சுக்குள் முறுகல்

(கொழும்பு)

வெளிநாடுகளில் உள்ள தூதரங்களில் உத்தியோகத்தர்கள் நியமனம் தொடர்பில் போகொல்லாகமவுக்கும் வெளிநாட்டமைச்சின் செயலாளர் பாலித ஹோகன்னவுக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இது குறித்து ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

கடந்த மாதம் 22ஆம் திகதி வெளிநாடுகளில் இலங்கையின் தூதரகங்களுக்கு வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித ஹோகன்ன சுற்று நிருபமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

வெளிநாட்டு தூதரகங்களில் உத்தியோகத்தர்களை அந்நாடுகளுக்கான திணைக்கள தூதுவர்களே தெரிவு செய்ய வேண்டும் எனவும் உள்நாட்டு தொழில் தேர்வின் மூலம் மேற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை எனவும் செயலாளர் தனது சுற்று நிருபத்தில் தெரிவித்திருந்தார்.

இந்த சுற்று நிருபத்தை [illegible] பின்னர் இம்மாதம் 2ஆம் திகதி வெளிவிவகார அமைச்சர் ரத்துச் செய்தார். செயலாளரினால் விடுக்கப்பட்ட சுற்று நிருபம் செல்லுபடி அற்றது எனவும் மற்றொரு சுற்று நிருபத்தை விடுத்திருந்தார்.

இதனையடுத்து இருவருக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. (ச-5)

## மின் ஒழுக்குக் காரணமாக வீடு தீப்பற்றி எரிந்தது!

### மனோகராச் சந்தியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மின் ஒழுக்கு காரணமாக வீடொன்று தீப்பற்றி எரிந்ததில் பல லட்சம் ரூபா பெறுமதியான மின்சாரப் பொருட்கள் எரிந்து சாம்பலாகின. இச்சம்பவம் நேற்றுக் காலை 10 மணியளவில் யாழ்.மனோகராச் சந்திக்கு அண்மையில் இடம் பெற்றுள்ளது.

மின்சார உபகரணங்கள் பழுதுபார்க்கும் வீடொன்றிலேயே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. குறிப்பிட்ட வீட்டில் பெற்றோர் இல்லாத நிலையில் நான்கு வயதுடைய நாகேந்திரம் தனுசியா என்ற சிறுமி மாத்திரமே இருந்துள்ளார்.

பூட்டப்பட்ட வீட்டினுள் தீ விபத்தில் சிக்கி பிரஸ்தாப சிறுமி கூக்குரலிட்ட போது அயலவர்கள் சிறுமியை காப்பாற்றியுள்ளனர்.

பின்னர் யாழ்.மாநகர சபை தீயணைப்புப் பிரிவினர் சம்பவ இடத்திற்குச் சென்று தீயினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.பழுது பார்ப்பதற்கெனவும்,விற்பனை செய்வதற்கெனவும் வைக்கப்பட்டிருந்த பல லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களே மின்னொழுக்கினால் எரிந்து சேதமாகியதாக தெரிவிக்கப்பட்டது. (எ-3)

## மோசடிக்காரர்கள் குறித்து இத்தாலிய தூதரகம் எச்சரிக்கை

இத்தாலி தூதரகத்துடன் தொடர்பு இருக்கின்றது என்றும் விசா விண்ணப்பம் மற்றும் சகல வி[illegible] விசா செயல்முறையும் தமக்கு [illegible]படைக்கப்பட்டுள்ளது என்றும் கூறி விண்ணப்பதாரிகளிடம் பெருந்தொகையான பணத்தை சிலர் மோசடி செய்வதாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இத்தகையவர்களின் மோசடிச் செயற்பாடுகள் குறித்து அவதானமாக இருக்குமாறு இத்தாலிய தூதரகம் அறிவித்துள்ளது.இது குறித்து தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

சில மோசடிக்காரர்கள் தமக்கு இத்தாலி தூதராலயத்துடன் தொடர்பு இருக்கின்றது என்றும் விசா விண்ணப்பம் மற்றும் எல்லா விதமான விசா செயல்முறையும் தமக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் விண்ணப்பதாரரிடம் பெருந்தொகையான பணம் வஞ்சகமான முறையில் மோசடி செய்வதாக இத்தாலிய தூதராலயத்திற்கு தெரியவந்துள்ளது.

இத்தாலி தூதரகம் இந்த மோசடிக்காரர்களை பொலிஸாருக்கு இனம்காட்டிக்கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறது.

மேலும் இந்த மோசடிக்காரர்களிடம் இருந்து பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

இத்தாலி தூதராலயத்தின் ஆலோசனைகளை பெறுவதற்கும் விண்ணப்பங்களை எடுப்பதற்கும், சமர்ப்பிப்பதற்கும் உள்ள ஒரே காரியாலயம் VFS, 120A ஹெவலொக் வீதி, கொழும்பு-5. தொ.பே.454-1143, 454-1144 பக்ஸ் 454-1142 ஈமெயில் info@ italy vfs.com , வெப் www.italy-vfs.com மாத்திரமேயாகும்.

இந்தக் காரியாலயத்தை விடவேறு எந்தக் காரியாலயத்துக்கோ நபருக்கோ இதற்கான அனுமதி கொடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## வாக்குறுதிகளை அரசு நிறைவேற்றியே தீரும்!

முதலாளித்துவ வர்க்கத்திற்கு சார்பானவர்கள் என்ன கூறினாலும் மகிந்த சிந்தனையில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்ற அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது என்று அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சில் நடைபெற விழாவொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,இந்நாட்டில் வாழும் அப்பாவி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே மகிந்த சிந்தனையின் இலக்காகும். சில அரசியல் கட்சிகள் சுவரொட்டி அரசியலை நடத்திக்கொண்டிருக்கின்றன.

ஆனால் எமது கட்சி அப்படி அல்ல, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தலைவராகக் கொண்டு இயங்கும் சுதந்திரக்கட்சி எப்போதுமே மக்களுக்கு பொறுப்புக் கூறும் கட்சியாகவே செயற்பட்டு வந்துள்ளது.

சில அரசியல் கட்சிகளும் தொழிற்சங்கங்களும் எப்போதும் குறை கூறும் கொள்கையையே பின்பற்றுகின்றன. அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தையும் அவை விமர்சித்தே வந்துள்ளன. மக்களை ஏமாற்றுவதைத தவிர அவர்களுக்கு வேறு ஒன்றுமே தெரியாது என்றார். (ச-5)

## வில்பத்து சரணாலயத்தில் பாதுகாப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த வாரம் வில்பத்து சரணாலயப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதலைத் தொடர்ந்து அதன் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த சரணாலயத்திற்கு அண்மையாக உள்ள பல கிராமங்களின் பாதுகாப்புக்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் அங்கு மேலதிக படையினரும் அனுப்பப்பட்டுள்ளதாக மூத்த இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கின்றார்.

இதனிடையே அன்றைய தாக்குதலில் கொல்லப்பட்ட அனுராதபுர பிரதேச இராணுவத் தளபதி லெப்.கேணல்.ஜயந்த சுரவீர கேணல் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.சரணாலயத்தின் பிரதான வாசலில் இருந்து 25கி.மீ தொலைவில் உள்ள அடர்ந்த காட்டுப்பகுதியில் இடம்பெற்ற இந்த தாக்குதலைத் தொடர்ந்து அப்பகுதியில் கடுமையான தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சரணாலயத்திற்கு அண்மித்த பகுதிகளில் யானைகளின் தாக்குதலுக்கு தாம் உள்ளாகியதாக கிராம மக்கள் தெரிவித்த முறைப்பாட்டை விசாரிக்கச் சென்ற வேளையில் இராணுவத்தின் பிரதேசத் தளபதியும் ஏனைய 7பேரும் பதுங்கித் தாக்குதலில் பலியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## இராணுவச் சிப்பாயின் சடலம் செ.சங்கத்திடம் கையளிப்பு

மன்னார் பகுதியில் இராணுவ சிப்பாய் ஒருவரின் சடலத்தினை தமிழீழ விடுதலைப் புலிகள் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திடம் கையளித்துள்ளனர்.

மன்னாரின் கிழக்குப் பிரதேசத்தில் இருந்து இச் சடலத்தை மீட்டுள்ளதாக தமிழீழ விடுதலைப்புலிகள் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திற்கு அறிவித்துள்ளார்.

இதனையடுத்து சடலம் நேற்று முற்பகல் செஞ்சிலுவை சங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.இராணுவ சிப்பாயின் சடலத்தினை கையேற்ற செஞ்சிலுவைச் சங்கத்தினர் அதனை மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாக செஞ்சிலுவைச் சங்கத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ச-3)

ஒரு மனித ஜீவன் செய்யக்கூடிய முயற்சிகள் அனைத்திலும் மிகமிகச் சிறந்தது தனக்குத் தானே முற்றிலும் யோக்கியமாக இருப்பது தான்.

—பிராயிடு

வலம்புரி

## ஐரோப்பிய ஒன்றியம் நேர்மையுடன் செயற்பட வேண்டும்

இலங்கையில் இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஒன்றைக் கொண்டு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் இலங்கையில் நடந்து வரும் சம்பவங்களை மனித உரிமை மீறலாக உலக நாடுகள் கணிப்பீட்டு உள்ளன.

எனினும் மனித உரிமை மீறல்களை வெளிப்படையாக கூறுவதில் உலக நாடுகள் காட்டும் தயக்கம் இலங்கை மண்ணில் சிறுபான்மை இனத்தினரை பெரிதும் பாதிக்கின்றது.

இந்நிலையில் ஜெனிவாவில் நேற்று ஆரம்பமாகிய ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அமைப்பின் நான்காவது மாநாட்டில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஐரோப்பிய ஒன்றியம் கொண்டு வரும் என்ற எதிர்பார்ப்பு நிறையவே உண்டு.

இந்த எதிர்பார்ப்புக்களின் மத்தியில் அதனை தடுப்பதற்கான நடவடிக்கைகளும் இடம் பெறுவதை மறுத்துவிட முடியாது.

மாநாட்டில் கலந்து கொள்ளும் மனித உரிமைகள் பேரனர்த்த நிவாரண அமைச்சர் மகிந்த சமரசிங்க ஐரோப்பிய ஒன்றியத்தின் தீர்மானத்தை தடுப்பதை மட்டும் நோக்காக கொண்டு மாநாட்டில் கலந்து கொள்கிறார்.

இலங்கையின் சமகால நிலைமை குறித்து ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகளுக்கு தெளிபடுத்த இருப்பதாகவும் அதன்மூலம் இலங்கைக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியம் கொண்டுவர இருக்கும் தீர்மானத்தை தடுக்க முடியும் எனவும் அமைச்சர் மகிந்த சமரசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இதேநேரம் ஐரோப்பிய ஒன்றியம் கொண்டு வரும் தீர்மானத்தை எதிர்ப்பதற்கு அமெரிக்காவும் இந்தியாவும் தயாராக இருக்கின்றன என்ற உண்மையையும் நாம் மறந்து விடுவதற்கு இல்லை.

இலங்கையில் கடந்த முப்பது வருடங்களாக மனிதப் படுகொலைகள் சர்வ சாதாரணமாக இடம் பெற்று வருகின்றன.

கொலை, கொள்ளை, கடத்தல், காணாமல் போதல் என்ற நிகழ்வுகள் தினசரி இடம் பெறுகின்றன. யார், எந்த இனம், எந்த மொழி, எந்த சமயம் என்ற கேள்விகளுக்கு அப்பால் மனித உயிர்கள் என்ற சிந்தனையோடு நோக்கினால், இலங்கை மனிதங்கள் வாழக்கூடிய இடமல்ல என்ற முடிபுக்கு நாம் வரவேண்டி இருக்கும். அந்தளவு தூரம் நிலைமை படுமோசமாகி விட்டது.

இந்தநிலையில் இலங்கையின் மனித உரிமைகளை பாதுகாத்து அமைதியும் சமாதானமும் நிறைந்த நாடாக அதனை மாற்ற வேண்டுமாயின் அங்கு சர்வதேசத்தின் தலையீடு தேவைப்படுகின்றது.

அந்தத் தலையீட்டின் ஒருவடிவமே இலங்கைக்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டு வருவதாகும். இவ்வாறு தீர்மானத்தை கொண்டு வருவது இலங்கையை அவமானப்படுத்துவதற்கு அல்ல. மாறாக இலங்கையை திருத்துவதற்காக என்ற உண்மை உணரப்படவேண்டும்.

இதனை அமெரிக்காவும் இந்தியாவும் உணரத் தவறினாலும் ஐரோப்பிய ஒன்றியம் நேர்மையுடன் செயற்பட்டு, மனித உரிமை மீறல் தொடர்பில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை கொண்டு வரவேண்டும்.

இது நிச்சயம் இலங்கையில் அமைதி ஏற்படுவதற்கு வழிவகுக்கும்.

# எதிர்காலத்தில் விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சில் கலந்து கொள்வர்

## அரச சமாதான செயலகப் பணிப்பாளர் நம்பிக்கை

(கொழும்பு)

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக அரசாங்கம் விரைவில் முன்வைக்கவுள்ள அரசியல் தீர்வுத் திட்டம் குறித்து வெளி நாடுகளை தெளிவுபடுத்தும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று வெளிவிவகார அமைச்சின் செயலாளரும் அரச சமாதான செயலகத்தின் செயலாளருமான பாலித ஹோகன்ன தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் எதிர்காலத்தில் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வார்கள் என்று அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. ஆனால் புலிகளிடம் எந்தவிதமான கோரிக்கைகளையும் முன்வைக்க அரசாங்கம் தயாராக இல்லை என்றும் அவர் மேலும் கூறினார்.

சமாதான செயற்பாடுகளின் தற்போதைய நிலைமை குறித்து கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் இவ்விடயம் குறித்து மேலும் கூறியதாவது;

இனப்பிரச்சினை தீர்வு விடயம் தொடர்பாக அரசாங்கம் விரைவில் அரசியல் தீர்வுத்திட்டமொன்றை முன்வைக்கவுள்ளது. இந்த தீர்வுத்திட்டம் முதலில் சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவிடம் வழங்கப்படும். அரசாங்கத்தின் இந்த யோசனை தொடர்பாக சர்வதேச நாடுகளை தெளிவுபடுத்த வேண்டியது எமது கடமையாகும்.

அந்த வகையில் சர்வதேச நாடுகளுக்கு அரசியல் தீர்வுத் திட்டம் குறித்து விரிவாக விளக்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் என்ற வகையில் மேற்கொண்டு வருகின்றோம்.

எமது உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயங்களின் போது இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. எதிர்வரும் சில கிழமைகளுக்குள் அரசாங்கத்தின் அரசியல் தீர்வு திட்டம் முன்வைக்கப்படும்.

அரசாங்கம் பேச்சுவார்த்தையில் நம்பிக்கை கொண்டுள்ளது. அத்துடன் பேச்சுக்கு தயாராகவும் இருக்கின்றது. ஆனால் அரசாங்கம் பேச்சுக்கான நல்லெண்ணத்தை வெளிப்படுத்தினாலும் விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து இதுவரை ஆக்கபூர்வமான பதில்கள் மற்றும் யோசனைகள் கிடைக்கவில்லை. ஆனால் புலிகள் பேச்சில் கலந்துகொள்வார்கள் என்று அரசாங்கம் எதிர்பார்க்கின்றது என்றார். (ச-5)

# புலிகளை பலவீனப்படுத்துவதற்கு அமெரிக்காவின் ஆதரவு தேவை

## கோத்தபாய ராஜபக்ஷ வேண்டுகோள்

விடுதலைப்புலிகளுக்கு எதிராக இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் படை நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் என்று பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாடுகளின் அழுத்தம் காரணமாக படை நடவடிக்கைகளை கைவிடவேண்டிய நிர்ப்பந்தம் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுவரும் கருத்துக்களை மறுத்திருக்கும் அவர் கிழக்கில் எஞ்சியிருக்கும் விடுதலைப் புலிகளின் நிலைகளைக் கைப்பற்றும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருப்பதால் படை நடவடிக்கைகள் தீர்க்கமான கட்டத்தை எட்டியிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவின் தெற்காசிய மற்றும் மத்திய ஆசியாவுக்கான பிரதி இராஜாங்கச் செயலாளர் ஸ்ரீவன் மான் மற்றும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் றொபேட் ஓ பிளேக் ஆகியோரை கடந்த வெள்ளியன்று சந்தித்த கோத்த பாய ராஜபக்ஷ இலங்கையின் நிலைமை குறித்து அவர்களுக்கு விளக்கமளிக்கும் போது இந்தக் கருத்துக்களைத் தெரிவித்திருப்பதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கையின் அனைத்து கடல் மற்றும் விமானத் தளங்களையும் அமெரிக்கப் படைகள் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கும் உடன்படிக்கை ஒன்று இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட சில தினங்களில் அமெரிக்க இராஜங்கத் திணைக்கள அதிகாரி ஸ்ரீவன் மான் இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

அமெரிக்காவின் நீண்டகாலத் திட்டமாக இருந்த இந்த உடன்படிக்கை குறித்த பூர்வாங்க ஏற்பாடுகள் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்க காலத்திலேயே மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்திலேயே அது பூர்த்தி செய்யப்பட்டிருக்கிறது.

இந்தப் பின்னணியில் இடம்பெற்ற இந்த விசேட சந்திப்பின் போது இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்தும் ஆராயப்பட்டதாகவும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான படை நடவடிக்கைகளை ஒருபுறம் மேற்கொண்டபடி அரசியல் தீர்வு முயற்சிகளையும் முன்னெடுக்கின்ற அரசாங்கத்தின் தந்திரோபாயம் பற்றி கோத்தபாய ராஜபக்ஷ அமெரிக்க இராஜதந்திரிகளுக்கு விளக்கியதாகவும் அந்தப் பத்திரிகைச் செய்தி குறிப்பிடுகிறது.

இராணுவத் தீர்வுக்குச் சமாந்தரமாக அரசியல் தீர்வு முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற அமெரிக்காவின் நிலைப்பாடு தொடர்பாக இதன்போது கருத்துத் தெரிவித்த கோத்தபாய ராஜபக்ஷ விடுதலைப்புலிகளின் துப்பாக்கிகள் ஓயும் வரையும் அரசியல் தீர்வொன்றைக் காண்பது சாத்தியமில்லை என்று தெரிவித்தாகவும் அந்தச் செய்தி கூறுகிறது. புலிகளை இராணுவ ரீதியாக ஒடுக்குவதற்கு அமெரிக்காவின் ஆதரவு அரசாங்கத்துக்குத் தேவைப்படுவதாகவும் கோத்தபாய ராஜபக்ஷ அமெரிக்க இராஜதந்திரிகள் இருவரிடமும் தெரிவித்துள்ளதாக கூறப்பட்டது. (எ-1)

# மேலும் 10 பொருட்களின் விலைகள் குறைப்பு

மக்கள் பாவனைக்கான அத்தியாவசியப் பொருட்களாக 10 வகை பொருட்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. தமிழ், சிங்களப் புதுவருடத்தை முன்னிட்டு இத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இது மார்ச் 7ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 30 திகதி வரை அமுலில் இருக்கும் என வர்த்தக சந்தைப்படுத்தல் அபிவிருத்தி கூட்டுறவு மற்றும் பாவனையாளர் சேவைகள் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள அத்தியாவசியப் பொருட்கள் குறித்து விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பொன்று நேற்று மாலை வர்த்தக சந்தைப்படுத்தல் அபிவிருத்தி கூட்டுறவு மற்றும் பாவனையாளர் சேவைகள் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

பால்மா, கோதுமை மா, சீமெந்து மற்றும் காஸ் ஆகிய நான்கு பொருட்களே முன்னர் அத்தியாவசியப் பொருட்களாக அறிவிக்கப்பட்டிருந்தன. தற்போது இத்துடன் சீனி, செத்தல் மிளகாய், பெரிய வெங்காயம், சின்ன வெங்காயம், பருப்பு, நெத்தலிக் கருவாடு, கடலை, பயறு, ரின்மீன் மற்றும் கோழி இறைச்சி போன்ற பொருட்களும் அத்தியாவசியப் பொருட்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

சீனி 50 ரூபா, செத்தல் மிளகாய் விசேடம் 160 ரூபா, சாதாரணம் 145 ரூபா, பெரிய வெங்காயம் 48 ரூபா, சின்ன வெங்காயம் 42 ரூபா, பருப்பு 75 ரூபா, நெத்தலி கருவாடு 145 ரூபா, கடலை 115 ரூபா, பயறு 105 ரூபா என குறைக்கப்பட்டுள்ளது. (ச-5)

## உயர்தர மாணவர்களின் வரவு வீதம் 70ஆக குறைப்பு

க.பொ.த.உயர்தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் பாடசாலை வரவை 70 %மாக குறைக்க தீர்மானித் துள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை கருத்திற் கொண்டு இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். உயர்தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் வரவு 80%மாக இருக்க வேண்டுமென சுற்று நிருபத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. இம்முறை நீண்ட காலமாக காணப்படுகின்றது. தேசிய பாடசாலை மற்றும் ஆரம்பாடசாலை வரவை 70%மாக குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச-1,3)

## ஐ.தே.கவின் மனு மீண்டும் ஒத்திவைப்பு

அரசாங்கத்துடன் இணைந்து கொண்ட ஐக்கிய தேசிய கட்சி சேர்ந்த 11 உறுப்பினர்களினதும் மத்திய செயற்குழு அங்கத்துவத்தை நீக்க வேண்டுமென கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மீண்டும் நேற்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு நீதிமன்றத்தில் நீதிபதி அநுர சிறி ரணசிங்க இது தொடர்பான நீதிமன்ற விசாரணைகளை எதிர்வரும் 19ஆம் திகதி வரை ஒத்திவைத்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க ஆகியோரே இவ் மனுவை தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-3)

# முன்னாள் அமைச்சர்களின் பாதுகாப்புக்கு பாதுகாப்பு அமைச்சால் பொலிஸ் நியமனம்

பதவி விலக்கப்பட்ட எங்கள் இருவருக்கும் பாதுகாப்பு வழங்குவதற்காக ஆறு பொலிஸாரை வழங்குவதாக அறிவித்தனர். எனினும் அந்த அதிகாரிகள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் தேர்ந்தெடுக்கப்பட்டு வழங்கப்படுவது பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது என்று பதவி விலக்கப்பட்ட அமைச்சர்களான மங்கள சமரவீர, ஸ்ரீபதி சூரியாராட்சி ஆகிய இருவரும் மனித உரிமை ஆணைக்குழுவிடம் நேற்று தெரிவித்துள்ளனர்.

தங்களது பாதுகாப்பு தொடர்பாக பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட மனுமீதான விசாரணை நேற்று நடைபெற்றது. இந்த விசாரணையின் போதே முன்னாள் அமைச்சர்கள் இவ்வாறு எடுத்துக் கூறியுள்ளனர்.

இந்த விசாரணையின் போது மனுவின் பிரதிவாதிகளான பொலிஸ் மா அதிபர் விக்டர் பெரேரா மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகிய இருவரின் சார்பாக பிரதி பொலிஸ்மா அதிபர் காமினி தஸநாயக்க வருகைதந்திருந்தார்.

சுமார் 30 நிமிடங்கள் நடைபெற்ற விசாரணைக்கு பின்னர் ஆணைக்குழுவின் கட்டடத்திற்கு வெளியில் குழுமியிருந்த ஊடகவியலாளர்களிடம் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர கருத்து தெரிவிக்கையில் கூறியதாவது;

எங்களுக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு குறைக்கப்பட்டது தொடர்பாக எங்களால் சமர்ப்பிக்கப்பட்ட மனுவின் பிரதிவாதிகள் இருவரும் ஆணைக்குழுவிற்கு வருகை தரவில்லை. முன்னாள் வெளிவிவகார அமைச்சர் என்ற வகையில் வெளிநாடுகளில் புலிகளை தடைச் செய்வதற்கு முன்நின்றேன். அத்துடன் ஸ்ரீபதி சூரியாராட்சியின் மீது புலிகள் கிளைமோர் தாக்குதல் நடத்துவதற்கு முயற்சி செய்தனர். இந்நிலையில் எங்களுக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு குறைக்கப்பட்டது.

எங்களது உயிருக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. விடுதலைப்புலிகளின் அச்சுறுத்தல்களுக்கு இலக்காகியுள்ள எங்களுக்கு பாதுகாப்பு அமைச்சரும் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு அமைச்சின் செயலாளரான கோத்தபாய ராஜபக்ஷவுமே பாதுகாப்பு வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்நிலையில் எங்களது கண்களுக்கு இடையூறு ஏற்பட்டால் அதற்கும் இவ்விருவருமே பொறுப்பு கூறவேண்டும். இந்த மனு மீதான விசாரணைகள் எதிர்வரும் 18ஆம் திகதி மீண்டும் நடைபெறும். (ச)

## சூட்டுக்காயங்களுடன் இருவர் வைத்தியசாலையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

நுணாவில் பகுதியில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நிலையில் நேற்றிரவு இருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நுணாவிலைச் சேர்ந்த கெ.ஜெயக்குமார் (வயது 32) என்.ஈஸ்வரநாதன் (வயது 42) ஆகிய இருவருமே சூட்டுக்காயங்களுடன் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவர் மீதும் இனந்தெரியாதோர் துப்பாக்கித் தாக்குதலை மேற்கொண்டதாக தெரியவருகிறது. (எ-5)

## ஜயலத் எம்.பி. இந்தியா பயணம்

இடம்பெயர்ந்து தமிழகத்தில் அகதிகளாக உள்ள மக்களின் தேவைகள் மற்றும் அவர்களின் நலன்கள் குறித்து ஐக்கிய தேசிய கட்சி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதிகரித்து வரும் வன்செயல்கள் காரணமாக ஆயிரக்கணக்கானவர்கள் பாது காப்பு கருதி தென்இந்தியா சென்றுள்ளதாக அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் குறித்து முதற் கட்டத் தகவல்களைப் பெறுவதற்காக ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜயலத் ஜயவர்தன நான்கு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு இந்தியா செல்லவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இவ்விஜயத்தின் போது தமிழக அரசாங்க பிரதிநிதிகளை அவர் சந்தித்து உரையாடவுள்ளார்.

இது தவிர தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கையர்கள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் அரச சார்பற்ற அமைப்புக்களையும் அவர் சந்தித்து உரையாடவுள்ளதாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-3)

## இறக்குவதில் ஏற்படும் தாமதமே விலை அதிகரிப்புக்கு காரணம்!

கொழும்பிலிருந்து கப்பலில் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்படும் பொருட்களை இறக்குவதில் ஏற்படும் தாமதமே யாழ்ப்பாணத்தில் பொருட்களின் விலை அதிகரிக்க காரணம் என அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அலுவல வட்டாரங்கள் தெரிவித்தன.

கப்பல் மூலம் எடுத்துவரப்படும் பொருட்கள் முன்னரைவிட தற்பொழுது அதிகரித்து காணப்படுகின்றமை குறித்துக் கேட்டபோதே இத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை துறைமுகத்தில் நாளாந்தம் 600 மெற்றிக் தொன் பொருட்கள் இறக்கப்பட்டு வந்தன. ஆனால் தற்போது காங்கேசன்துறை துறைமுகத்தில் நாளாந்தம் நூறு மெற்றிக் தொன் பொருட்களே இறக்கப்பட்டு வருகின்றன.

இதனால் கப்பல் நீண்ட நாட்களுக்கு தரித்து நிற்க வேண்டி ஏற்படுகிறது. இந்நிலையில் தாமதக் கட்டணம் அதிகரிக்கப்படுவதுடன் ஊழியர்களுக்கான கூலியும் அதிகரிக்கின்றது.

இச் செலவுகள் பொருட்களின் விலையுடன் சேர்க்கப்படுவதால் பொருட்களின் விலைகள் அதிகரித்துக் காணப்படுவதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ச-5)

## முகமாலையில் கிளைமோர் மீட்பு

முகமாலை பகுதியில் அதிசக்தி வாய்ந்த கிளைமோர் இரண்டு கைப்பற்றப்பட்டுள்ளது. முகமாலை பகுதியில் மேற் கொள்ளப்பட்ட தேடுதலின் போதே இக்கிளைமோர் குண்டு கைப்பற்றப்பட்டதாக தேசியபாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

முகமாலையில் விடுதலைப்புலிகளினால் இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட சிறிய தாக்குதலையடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் இக்கிளை மோர்குண்டு கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ச)

### மகிந்த-புலிகள்...

விலக்கப்பட்ட முன்னாள் அமைச் சர்களான சிறிபதி சூரியாராட்சியும் மங்கள சமரவீரவும் தெரிவித்து வருகின்றனர்.

சிறிபதி சூரியாராட்சி தான் பசில் ராஜபக்ஷவுடனும் டிரான் அலஸுடனும் முதற்கட்டப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டதாகவும் தெரிவித்துள்ளார். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை வெற்றிகொள்ள வைப்பதற்காகவே இந்த உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டதாக கூறப்படுகிறது.

ஆனால் இந்த குற்றச்சாட்டுக்குறித்து ஜனாதிபதி இதுவரை எந்தப் பதிலையும் அளிக்கவில்லை. எனவே இந்தக்குற்றச்சாட்டு தொடர்பாக முழுமையான பதில் ஒன்றை அளிக்குமாறு ஜனாதிபதியைக் கோருகின்றேன்.

மங்கள சமரவீரவும் சிறிபதி சூரியாராட்சியும் மகிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்காக உழைத்தவர்கள். அதேவேளை என்னைத் தோற்கடிப்பதற்காக நடவடிக்கையை மேற்கொண்டவர்கள். எனவே அவர்கள் என்னைப் பாதுகாப்ப தற்காக இந்தக் கூற்றையும் வெளியிட்டிருப்பார்கள் என நான் நினைக்கவில்லை என்றார். (ச-5)

### சபாநாயகர்...

மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் ரி.பி.எக்கநா யக்க ஆகியோர் யப்பான் விஜயத்தை மேற் கொண்டுள்ளனர்.

இந்த விஜயத்தின்போது இவர்கள் யப்பான் பிரதமர், நிதியமைச்சர், ஜெய்கா நிறுவனத் தலைவர் உட்பட பல பிரதிநிதிகளைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

விசேடமாக இலங்கைக்கான விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாசியை சந்தித்து சமாதான செயற்பாடுகளின் தற்போதைய நிலைமை தொடர்பாக கலந்துரையாடவுள்ளதாக வஜிர அபேவர்த்தன தெரிவித்தார். (ச-5)

### கூட்டமைப்பு...

கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயானந்தமூர்த்தி தெரிவித்துள்ளார்.

நேற்றைய சந்திப்பில் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களான அரியநேந்திரன் , கனகசபை,தங்கேஸ்வரி ஆகியோரும் கலந்து கொண்டதாக கூட்டமைப்பு தெரிவித்தது. (ச-3)

### கிளைமோர்...

பகுதியில் ரோந்து நடவடிக் கையில் ஈடுபட்டிருந்த ஊர்காவற் படை வீரர்களை இலக்கு வைத்து நேற்றுக் காலை 7.15 மணியளவில் இக் கிளைமோர்த் தாக்குதல் நடத்தப் பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. (ச-5)

### உண்ணாவிரதக்...

சிறையில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட 42 தமிழ் இளைஞர்கள் விசாரணைகளை துரிதமாக நடத்தி தம்மை விடுதலை செய்ய வேண்டும் எனவும் தம் மீதான விசாரணைகள் தாம் கைது செய்யப்பட்ட மாவட்டத்திலேயே நடத்தப்படவேண்டுமென்ற இரு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று மூன்றாவது நாளாகவும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-3)

### மீனவர் படுகொலையை...

பேரணி சேப்பாக்கம் விருந்தினர் மாளிகைக்கு அருகே யுள்ள வளாகத்தைச் சென்றடைந்ததும் ஆர்ப்பாட்டம் நடந் தது ஊர்வலத்தின் முன்பு படகு ஒன்று கொண்டு செல்லப் பட்டது.

அதில் இலங்கை இராணுவம் தமிழக மீனவர்களை தாக்குவது போன்ற காட்சியை தி.மு.க.தொண்டர்கள் நடித்துக் காண்பித்ததாக தெரிவிக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டம் முடிந்ததும் அமைச்சர்கள் ஆர்க்காடு வீராசாமி ,மு.க.ஸ்ராலின், கே.கே.பி.சாமி ,துரைமுருகன், பரிதிஇளம் வழுதி, மாவட்ட செயலாளர்கள்,ஜெயராமன், பலராமன் ஆகியோர் சென்னை டி.டி.கே.சாலையிலுள்ள இலங்கைத் தூதரக அலுவலகம் சென்று மனுவை கையளித்தனர். (ச-5)

### இல.கடற்படையை...

ஒப்புதலை அறிவித்துள்ள தாக அவர் தெரிவித்துள்ளார். இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்துவதைக் கண்டித்து நேற்று சென்னையில் தி.மு.க.சார்பில் கண்டன பேரணி மற்றும் ஆர்பாட்டம் நடைபெற்றது.

இது குறித்து மு.கருணாநிதி மேலும் தெரிவித்ததாவது, 'இன்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் முடிபில் அமைச்சர்கள் குழு இலங்கைத் தூதரக அதிகாரியை அவரது அலுவலகத்தில் சந்தித்து மனுவொன்றைக் கொடுத்துள்ளார்கள். மனுவைப் பெற்றுக்கொண்ட இலங்கைத் தூதுவர், மீனவர்கள் தாக்குதல் சம்பவம் தொடர்பாக பிரதமர் அலுவலகம் எங்களிடம் தகவல் கோரியுள்ளது.

'இத் தாக்குதல் ஏற்புடையது அல்ல என்று கூறியதாகவும் இனிமேல் இதுபோன்ற சம்பவங்கள் நடக்காமல் தடுக்க இலங்கை அரசு ரோந்து மற்றும் ஆய்வு சமயத்தில் தனது கடற்படையுடன் இந்திய இராணுவத்தையும் சேர்த்துக்கொள்ள சம்மதித்திருப்பதாகவும் அமைச்சர்கள் குழுவிடம் தெரிவித்துள்ளார்' என்றார். (ச-3,5)

### சமாதான ...

பொருட்கள் எடுத்துவரப்படாமை, மீன்பிடித் தொழிலுக்கான கட்டுப்பாடுகள், விவசாயம், தபால் சேவைகள் போன்ற அத்தியாவசிய சேவைகளை சீராக்கல் செய்யப்பட வேண்டுமென அரச அதிபருக்கு சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான குழுவினர் விரிவாக எடுத்துரைத்தனர்.

இச் சந்திப்புத் தொடர்பாக கருத்துத் தெரிவித்த யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் இத்தகைய சந்திப்புக்கள் மூலம் மக்களின் குறைகள் மக்கள் பிரதிநிதிகளால் எடுத்துரைக்கப் படுவதால் அத்தியாவசிய சேவைகளை குறையின்றி மேற்கொள்ள முடியுமென தெரிவித்தார். (ச-5)

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான வாகன ,மோட்டார் சைக்கிள், உடைந்த பிளாஸ்ரிக் சிறந்த முறையில் ஒட்டிக் கொடுக்கப்படும்.

*த.டயானா,*
*இல.06,கனகசபை லேன்,*
*வண்ணார் பண்ணை,*
*சிவலிங்கப்புளியடி,*
*யாழ்ப்பாணம்.*

T.P:- 077 9061568 (809)

### தேசிய பிரச்சினைக்குத்...

இது தொடர்பில் அக் கட்சியின் பேச்சாளர் ஆர்.யோகராஜன் தெரிவித்ததாவது;

எமது தீர்வுத் திட்டத்தின் இறுதி வரைபு தயாராகிவிட்டது. ஆனால் நாம் அரசின் நிலையை அறிவதற்காக காத்திருக்கின்றோம். மத்திய பகுதியிலுள்ள இந்திய வம்சாவளி தமிழ் மக்களுக்கு கல்வி,கலாசாரம் ,பொருளாதாரங்களில் அதிக அதிகாரங்கள் அளிக்கப்படவேண்டும்.

சமுர்த்தித்திட்டத்தில் எமது மக்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக உணர்கின்றார்கள். இந்த பொருளாதார நன்மைகளைப் பெறுவதற்கு எமது சமூகத்திற்குள் ஒரு தரமான நபரை தெரிவு செய்யும் அதிகாரங்களும் எமக்கு வழங்கப்படவேண்டும்.

வட மத்திய மற்றும் வட மேற்கு மாகாணங்கள் ஓர் அலகின் கீழ் கொண்டுவரப்படவேண்டும் என்பதுடன் அவற்றுக்கு புவியியல் பொருளாதார சமத்துவமும் வழங்கப்பட வேண்டும்.

மொனறாகல மாவட்டம் தீர்மானிக்கப்பட்ட தென் பிராந்தியத்துடன் இணைக்கப்பட வேண்டும்.மேற்கு மாகாணம் ஒரு பிராந்தியமாகவே தொடர்ந்தும் பேணப்படவேண்டும் என்பதுடன் அதிக சனத்தொகை கொண்ட பிரதேசமாகவும் உயர் அபிவிருத்திக்குரிய பிரதேசமாகவும் அது கருதப்படவேண்டும்.

கிழக்குப் பகுதி முஸ்லிம்களுக்கு ஒரு துணைப் பிராந்தியத்தை உள்ளடக்கியதாக வடக்கு-கிழக்கு மாகாணங்கள் மீண்டும் இணைக்கப்படவேண்டும் என்றார் அவர்.

இதனிடையே ஐக்கிய தேசியக்கட்சியின் புதிய ஜனநாயகக்கட்சி தமது திட்டத்தை சமர்ப்பிக்கப்போவதாக எழுந்த செய்தி குறித்து அனைத்துக் கட்சிக்குழுவின் தலைவர் திஸ்ஸ விதாரணவை வினவியபோது அவர் கூறியதாவது;

அவர்களை ஒரு தனியான அரசியல் கட்சியாக இந்தக் குழுவில் இணைப்பது தொடர்பாக நான் முடிபெடுக்கமுடியாது. இந்தக் குழுவில் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளே உள்ளன. இந்தக்குழு அனைத்துக் கட்சிகளாலும் உருவாக்கப்பட்டது.

எனவே ஜனாதிபதியே இது தொடர்பாக முடிபெடுக்க முடியும். நான் மட்டும் இதனை தீர்மானிக்கமுடியாது என்றார் அவர். (ச-5)

### ஐ.நா.மனித...

தொடர்பாகவும் விளக்கமளித் துள்ளார்.

நேற்று ஆரம்பமாகி எதிர்வரும் 30 ஆம் திகதிவரை நடைபெறும் இந்த நான்காவது கூட்டத் தொடரில் நியூயோர்க்கை தளமாகக் கொண்டியங்கும் ஹியூமென் ரைட் வோர்ச் எனப்படும் மனித உரிமைகளுக்கான கண்காணிப்பகம் உட்பட பல முன்னணி அமைப்புக்கள் இலங்கையில் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்புக்குழுவை அமைப்பது தொடர்பாக விவாதிக்கவுள்ளன.

நீதியற்ற கொலைகள் மற்றும் எழுந்தமானமான கொலைகள் தொடர்பான அறிக்கையாளர் பிலிப் அல்ஸ்ரன் ஐக்கிய நாடுகள் சபையின் சிறார்களும் ஆயுதமோதல்களுக்குமான பிரதிநிதி ராதிகா குமாரசுவாமி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் குழுவின் ஆணையாளர் லூயிஸ் ஆபர் ஆகிய மூவரும் இலங்கை தொடர்பான விடயங்களை சமர்பிக்கவுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-5)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.03.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.